# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

# வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள்

(புதிய வினாத்தாள் வடிவமைப்பு)

# பொதுத்தமிழ் - மேல்நிலை முதலாமாண்டு - 2019

**காலஅளவு: 2.30 மணி** **மொத்த மதிப்பெண்கள்: 90**

**பகுதி – அ (செய்யுள், உரைநடை)**

**I. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.)** **6x1=6**

1. ஒரிய மொழிக் கவிஞர்
   அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே இ) மனோரமா பிஸ்வாஸ் ஈ) பாப்லா நெரூடா
2. "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ" என்ற வரிகள் இடம் பெறும் நூல்
   அ) தொல்காப்பியம் ஆ) சிறுபாணாற்றுப்படை இ) கலித்தொகை ஈ) திருமுருகாற்றுப்படை
3. "சிந்து வெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்" என்னும் நூலின் ஆசிரியர்
   அ) பாலகிருஷ்ணன் ஆ) சுஜாதா இ) பிரபஞ்சன் ஈ) பிரமிள்
4. படைக்கவும் அடக்கவும் கொண்ட ஆற்றல்
   அ) லகிமா ஆ) கரிமா இ) பிராகாமியம் ஈ) ஈசத்துவம்
5. மகிழ்ச்சியின் மைந்துறும் போது ___________ உள்ளுக.
   அ) குறிப்பின் குறிப்புணர்வாரை ஆ) மானம் மாண்ட வழிச்செலவு
   இ) பகை என்னும் பண்பில் அதனை ஈ) இகழ்ச்சியின் கெட்டாரை

**6. பொருத்துக.**

1. வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
2. அண்ணாமலையார் - ஆ) சி.சு. செல்லப்பா
3. வாடிவாசல் - இ) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச் சிந்து

**பகுதி – ஆ (இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)**

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **8x1=8**

7. பெருங்கலம் என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகள் யாவை?
8. யாருடைய பிறந்த நாளை உலக நல நிறுவனம் உலக நீரிழிவு நோய் நாளாகக் கடைபிடித்து வருகிறது?
9. Invasion என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக.
10. தருதி - இச்சொல்லின் வேர்ச்சொல்லை கூறுக.
11. கேட்டு என்ற வினையெச்ச சொல்லை வினையாலணையும் பெயராக மாற்றுக.
12. சிறுகதை மன்னர் என்று போற்றப்படுபவர் யார்?
13. திரை இசையில் ஃபா.ப்பி இசையை அறிமுகப்படுத்தியவர் யார்?
14. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    காலங்காத்தால எந்திரிச்சுப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

**III. அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3x2=6**

15. பாயிரத்திற்கு உரிய ஏழு பெயர்களைக் குறிப்பிடுக.
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. நலங்கிள்ளி ஆற்றல் எத்தகையது?
18. செந்துறைப் பாடாண் பாட்டு - துறை விளக்கம் தருக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x2=4**

19. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
20. ஆனந்தரங்கர், ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி விளக்குக.
21. கலைச்சொல், அகராதி - வேறுபடுத்தி விளக்குக.

**IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7X2=14**

22. பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) அலர்ந்து ஆ) ஆழ்க
23. புணர்ச்சி விதி தருக. அ) பெருந்தவத்தாய் ஆ) மன்னுயிர்
24. இயல்பீறு, விதியீறு - எடுத்துக்காட்டுத் தருக.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



25. "திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தவர் ஜி.யு. போப்" - விடைக்கேற்ற வினாவை எழுதுக.
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) கால்நடை ஆ) தங்கை
27. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. கலை, களை, கழை
28. பிறமொழிச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக. அ) smartphone ஆ) prospectus
29. சிலப்பதிகாரத்தைப் படித்தேன் வியந்தேன் மகிழ்ந்தேன் - இத்தொடருக்குரிய நிறுத்தற்குறிகளை இடுக.
30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
பள்ளி கூடங்களில் பயிலும் மாணவர்கள், தமிழ்மொழி வழியாகவே அனைத்து துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

**V. சிறுவினா**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8**

31. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடம் சுட்டி விளக்குக.
32. சங்ககாலத் தமிழர்களின் வானியல் அறிவினை முதுகண்ணனார் பாடல் வழிப் புலப்படுத்துக.
33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8**

34. ஒற்றை வைக்கோல் புரட்சி – குறிப்பு வரைக.
35. ப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
36. "சித்தர்கள் சமூக உணர்வு கொண்டவர்கள்" இக்கூற்றை ஆராய்க.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3x4=12**

37. பாடாண்திணை அல்லது பொருண்மை காஞ்சித் துறை விளக்குக.
38. சொற்பொருள் பின்வருநிலையணி அல்லது வேற்றுமை அணியை விளக்குக.
39. குறிப்புகளைக் கொண்டு பத்தியாக எழுதுக.
வீடு – மின்சாதனக் கருவி – கவனம் – ஈரக்கை – தவிர்த்தல் – தொலைக்காட்சி – அலைப்பேசி – இரவு – அணை – அதிகாலை – பள்ளிகள் – பொதுவிடங்கள் – திடல் – மின்கம்பம் – கவனம்
40. இலக்கிய நயம் பாராட்டுக. (எவையேனும் நான்கு நயங்கள்)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்

**- பாரதியார்**

**VII. நெடுவினா (இரண்டனுக்கு மட்டும்) 2x6=12**

அ) 41. "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

**(அல்லது)**

கண்ணன் கன்னனிடம் வேண்டி நின்ற நிகழ்வை வில்லிபாரதம் வழி விரிவாக எழுதுக.

42. பௌத்த கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரி.

**(அல்லது)**

இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இருந்தன - இக்கூற்றினை மெய்ப்பிக்க.

**ஆ) பின்வரும் துணைப்பாடல் பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 1x6=6**

43. இனிக்கும் இன்சுலின் கட்டுரைச் செய்திகளை உரையாடல் வடிவில் தருக.

**(அல்லது)**

நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றை சுருக்கி எழுதுக.

**VIII. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6**

44. அ) உண்டால் அம்ம.....எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
ஆ) பொருட்டு என முடியும் குறளை எழுதுக.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள்

# பொதுத்தமிழ் - மேல்நிலை முதலாமாண்டு - 2019

## விடைக்குறிப்புகள்

பகுதி – அ (செய்யுள், உரைநடை)

| I. பலவுள் தெரிக. | 6. பொருத்துக. |
|---|---|
| 1. இ) மனோரமா பிஸ்வாஸ் | 1. வெள்ளிவீதியார் - அ) குறுந்தொகை |
| 2. ஈ) திருமுருகாற்றுப்படை | 2. அண்ணாமலையார் - ஆ) காவடிச் சிந்து |
| 3. அ) பாலகிருஷ்ணண் | 3. வாடிவாசல் - இ) சி.சு. செல்லப்பா |
| 4. ஈ) ஈசத்துவம் | 4. இளம்பெருவழுதி - ஈ) புறநானூறு |
| 5. ஈ) இகழ்ச்சியின் கெட்டாரை | |

பகுதி – ஆ (இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

7. ஈறுபோதல், இனமிகல்
8. பிரெடெரிக் பாண்டிங்
9. படையெடுப்பு
10. தரு
11. கேட்போர், கேட்பவர்
12. புதுமைப்பித்தன்
13. ஏ.ஆர். ரஹ்மான்
14. காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்

**III. அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**15. பாயிரத்திற்கு உரிய ஏழு பெயர்கள்:**

1. முகவுரை 2. பதிகம் 3. அணிந்துரை 4. புனைந்துரை
5. நூன்முகம் 6. புறவுரை 7. தந்துரை

**16. ‘தமிழர்கள் புகழ், பழியை ஏற்றதாகப் புறநானூறு கூறுவது:**

- தமிழர்கள், புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர்; பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளார்;
- தமிழர்கள் எதற்கும் மனம் தளரமாட்டார்கள் என தமிழர்களின் சிறப்பைப் புறநானூறு கூறுகிறது.

**17. நலங்கிள்ளி ஆற்றல்:**

நலங்கிள்ளி, யானை தன் கதுப்பில் அடக்கி எறியும் கல்லைப் போலத் திறமையை ஒளித்து வைத்திருக்கும் ஆற்றல் படைத்தவன்.

**18. செந்துறைப் பாடாண் பாட்டு - துறை விளக்கம்:**

- செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல்.
- இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**19. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளமை:**

- மலை, மனித சமூகத்தின் ஆதி நிலமாகும்.
- தமிழ் அகத்திணையியல், மலை மற்றும் மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சி என்று குறிக்கும்.
- குறிஞ்சி நிலம் சார்ந்த சங்கப் பாடல்கள் மலையோடு இயைந்த தமிழர்தம் சீரிய வாழ்வினைப் பேசின.

**20. ஆனந்தரங்கர், ஒரு வரலாற்று ஆசிரியர்:**

- பன்மொழிப் புலமையும் பல்துறை ஆளுமையும் கொண்ட ஆனந்தரங்கர் புதுச்சேரி வரலாற்றினைப் பதிவு செய்தவரில் முதன்மையானவர்.
- அவருடைய நாட்குறிப்புகள் 18-ஆம் நூற்றாண்டின் புதுவை வரலாற்றினை அறிந்துகொள்ள நமக்குக் கிடைத்த அரிய பெட்டகமாகும்.
- புதுச்சேரியில் பிரெஞ்சு ஆட்சியின் எழுச்சியும், வீழ்ச்சியும் அவரின் வாழ்வோடு ஒன்றியிருப்பது ஓர் அரிய நிகழ்வு ஆகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**21. கலைச்சொல், அகராதி – வேறுபாடு:**

| கலைச்சொல் | அகராதி |
|---|---|
| ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறை சார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக, உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்களைக் கலைச்சொற்கள் என்கிறோம். | பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம். |
| எ.கா. மருத்துவமனை (Clinic), எழுதுசுவடி (Notebook). | எ.கா. Library – நூலகம், Librarian – நூலகர். |

## IV. *எவையேனும் ஏழனுக்கு விடை தருக.*

**22. பகுபத உறுப்பிலக்கணம்:**

**அ) அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ**
அலர் - பகுதி
த் - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**ஆ) ஆழ்க – ஆழ் + க**
ஆழ் - பகுதி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

**23. புணர்ச்சி விதி:**

**அ) பெருந்தவத்தாய் – பெருமை + தவத்தாய்**
ஈறு போதல் - பெரு + தவத்தாய்
இனம் மிகல் - பெரு + ந் + தவத்தாய்
பெருந்தவத்தாய்

**ஆ) மன்னுயிர் – மன் + உயிர்**
தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டும் - மன்ன் + உயிர
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - மன்னுயிர்.

**24. இயல்பீறு, விதியீறு - எடுத்துக்காட்டு:**

**இயல்பீறு** என்பது இயல்பாக நிற்கும் சொல்லின் வடிவம். எ.கா. பள்ளி + தோழன் - பள்ளித்தோழன்.

**விதியீறு** என்பது புணர்ந்தபின் நிற்கும் சொல்லின் வடிவம். எ.கா. நிலம் + தலைவர் - நில + தலைவர் (விதியீறு) - நிலத்தலைவர்.

**25. விடைக்கேற்ற வினா:**
ஜி.யு. போப் திருக்குறளை எந்த மொழியில் மொழிப்பெயர்த்தார்? அதற்கான காரணம் என்ன?

**26. அ) கால்நடை ஆ) தங்கை**
வளவன் ஆற்றை **கால்** கொண்டு **நடந்து** அக்கரைச் சென்றான்.
வளவன் **கால்நடை**யைக் பயன்படுத்தி ஆற்றின் அக்கரைக்குச் சென்றான்.

மாறன் **தம் கையால்** ஏர் பிடித்து நிலத்தை உழுதான்.
மாறன் **தங்கையோடு** சேர்ந்து ஏர் பிடித்து நிலத்தை உழுதான்.

**27. கலை, களை, கழை**
**கழை (மூங்கில்)** யினால் செய்யப்பட்ட புல்லாங்குழலின் இசை, கேட்பவர்**களை** மனம் மயங்கும்படி இசைப்பதும் ஒரு **கலை**யாகும்.

28. அ) **திறன்பேசி** ஆ) **விளக்கச்சுவடி**

29. சிலப்பதிகாரத்தைப் படித்தேன்; வியந்தேன்; மகிழ்ந்தேன்.

30. பள்ளி**க்**கூடங்களில் பயிலும் மாணவர்கள், தமிழ்மொழி வழியாகவே அனைத்து**த்** துறை**க்** கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

## V. *சிறுவினா*

*அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*

**31. "சலச வாவியில் செங்கயல் பாயும்":**
இடம் : இப்பாடல் வரி அமைந்தது திருமலை முருகன் பள்ளு என்னும் சிற்றிலக்கியமாகும். இதன் ஆசிரியர் பெரியவன் கவிராயர்.
விளக்கம் : தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.
(**சலச வாவி –** தாமரைத் தடாகம், **செங்கயல்** - மீன்கள்)



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**32. முதுகண்ணனார் பாடல் வழி சங்ககாலத் தமிழர்களின் வானியல் அறிவு:**

நலங்கிள்ளி நாட்டில் கதிரவனின் வீதியையும், அதன் இயக்கத்தையும் காற்றின் திசையையும், முடிவில்லாத வானத்தையும் நேரில் சென்று அறிந்தவர்கள் போல அவற்றின் தன்மைகளையும் கூறும் அறிஞர்கள் அன்றே இருந்துள்ளனர் என்பது முதுகண்ணனார் பாடல் வழி அறியலாம்.

**33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன:**

குற்றாலக் குறவஞ்சியில் சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாவன: சிலம்பு, திருகு, பாடகம், மார்க்கம், அணிமணி, காலாழி ஆகியனவாகும்.

***ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.***

**34. ஒற்றை வைக்கோல் புரட்சி:**

- வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் ஜப்பான் அறிஞர் **மசானபு ஃபுகோகா.**
- இவர் 1978ஆம் ஆண்டு, **"ஒற்றை வைக்கோல் புரட்சி"** என்னும் நூலை எழுதியவர்.
- உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் ஆகிய ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர்.
- இவையே **"ஒற்றை வைக்கோல் புரட்சி" எனப்படுகிறது.**

**35. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள்:**

**ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்** : ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள். சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது. இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களிலும் காணலாம்.

**கற்றளிக் கோயில்கள்** : செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதுபோல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர். ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவம் இது. மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியவற்றை இதற்கு உதாரணங்களாகும்.

**36. "சித்தர்கள் சமூக உணர்வு கொண்டவர்கள்":**

- சித்தர் பாடல்கள் என்றதும் முதலில் நம் நினைவுக்கு வருவது அவர்களுடைய ஆழ்ந்த சமூகவுணர்வே ஆகும். அவர்கள் சமூகத்தில் நிலவிய பல்வேறு கண்மூடிப் பழக்கவழக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும், பொருளற்ற செயல்களையும், போலிச் சடங்குகளையும் நெஞ்சுரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் கடுமையாகச் சாடியவர்கள். அதனால்தான், அறிஞர் க.கைலாசபதி, சித்தர்களை, 'கிளர்ச்சியாளர்கள்' என்று கூறுகின்றார்.
- இன்றைய சமூகத்தை மிகவும் அல்லல்படுத்தும் சாதிக்கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் பாடியவர்கள். "சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?" என்று சிவவாக்கியரும் "சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்" என்று பாம்பாட்டிச் சித்தரும் பாடியுள்ளனர்.

**VI. *எவையேனும் மூன்றனுக்கு விடையளி.***

**37. அ) பாடாண்திணை விளக்கம்:**

- பாடு + ஆண் + திணை. பாடப்படும் ஆண்மகனின் சிறப்பியல்புகளைப் புகழ்ந்து கூறி வாழ்த்துவது பாடாண்திணையாகும்.

**பாடல்** : புறநானூறு பாடல் (30). ஆசிரியர் : உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.

**பாடலின் பொருள்** : நலங்கிள்ளி நாட்டில் கதிரவனின் வீதியையும், அதன் இயக்கத்தையும் காற்றின் திசையையும், முடிவில்லாத வானத்தையும் நேரில் சென்று அறிந்தவர்கள் போல அவற்றின் தன்மைகளையும் கூறும் அறிஞர்கள் உள்ளனர். அவர்களால்கூட அறிந்துகொள்வதற்கு அரியவன் நலங்கிள்ளி. அவன், யானை தன் கதுப்பில் அடக்கி எறியும் கல்லைப் போலத் திறமையை ஒளித்து வைத்திருக்கும் ஆற்றல் படைத்தவன். அதனால், புலவர்கள் அவனை எங்ஙனம் பாடுவர்? என்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**ஆ) பொருண்மை காஞ்சித் துறை விளக்கம்:**

- மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

**பாடல்** : புறநானூறு பாடல் (182). ஆசிரியர் : கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி.

**பாடலின் பொருள்** : தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது இனிமையானது என்பதற்காகத் தனித்து உண்ண மாட்டார்கள்; யாரையும் வெறுக்க மாட்டார்கள்; சோம்பலின்றிச் செயல்படுவார்கள்; பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்; புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர் ; பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளார் ; எதற்கும் மனம் தளரமாட்டார்கள். இத்தகைய சிறப்புடையோர் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

38. **அ) சொற்பொருள் பின்வருநிலையணி :**

- முன்னர் வந்த சொல்லும், பொருளும் பின்னர்ப் பல இடங்களிலும் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.
- **எ.கா :** "வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
  துணைவலியும் தூக்கிச் செயல்".
- இக்குறட்பாவில் 'வலி' என்னும் சொல் 'வலிமை' என்ற ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால், இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**ஆ) வேற்றுமை அணி :**

- வேற்றுமை அணி என்பது இரு பொருள்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமையைக் கூறி, பின் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது ஆகும்.
- **எ.கா. :** "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
  நாவினால் சுட்ட வடு".
- இக்குறட்பாவில் தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும்; ஆனால், நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது என்று கூறி, இரு பொருள்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையைக் கூறி, பின் அவற்றை வேறுபடுத்துவதால், இது வேற்றுமை அணி ஆகும்.

39. **குறிப்புகளைக் கொண்டு பத்தியாக எழுதுக.**

**வீடு – மின்சாதனக் கருவி – கவனம் – ஈரக்கை – தவிர்த்தல் – தொலைக்காட்சி – அலைப்பேசி – இரவு – அணை – அதிகாலை – பள்ளிகள் – பொதுவிடங்கள் – திடல் – மின்கம்பம் – கவனம்**

**வீடு**களில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் **மின்சாதனக் கருவி**களை மிகவும் **கவனமாக** கையாளுதல் அவசியமாகும். அவற்றை **ஈரக்கை**யோடு தொடுவதைத் **தவிர்த்தல்** வேண்டும். **தொலைக்காட்சி** மற்றும் **அலைப்பேசி** போன்ற மின்சாதனங்களை, **இரவு** நேரங்களில் **அணை**த்து வைக்க வேண்டும். **அதிகாலை**யில், **பள்ளிகள், பொதுவிடங்கள்,** விளையாட்டுத் **திடல்**கள் முதலான மக்கள் கூடும் இடங்களில், **மின்கம்பம்,** மின்கம்பிகள் முதலானவற்றில் அதிக **கவனத்தோடு** இருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

40. **இலக்கிய நயம் பாராட்டல்**

**குறிப்புச்சட்டகம்**

- முன்னுரை
- ஆசிரியர் குறிப்பு
- மையக்கருத்து
- திரண்ட கருத்து
- சொல் நயம்
- பொருள் நயம்
- தொடை நயம்
  - அ) மோனை நயம்
  - ஆ) எதுகை நயம்
  - இ) முரண் நயம்
  - ஈ) இயைபு நயம்
- அணி நயம்
- சுவை நயம்
- சந்த நயம்
- தலைப்பு
- முடிவுரை

**முன்னுரை:**

அந்நாள்களில் மாட்டுவண்டி நுழையாத ஊர்களுக்குள் எல்லாம் தன் பாட்டுவண்டியை நுழைத்தவன் பாரதி. அவன், பெண்ணடிமை நீங்கப் பாடிய பாடல்களுள் ஒன்றான இப்பாடலின் இலக்கிய நயங்களைக் குறித்து இங்குக் காண்போம்.

**ஆசிரியர் குறிப்பு**

- பெயர் - பாரதியார்
- இயற்பெயர் - சுப்பிரமணியன்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- பெற்றோர் - சின்னசாமி - இலக்குமி அம்மையார்
- ஊர் - திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரம்
- சிறப்புகள் - 7 வயது முதல் கவிதை புனையும் ஆற்றல் பெற்றார். எட்டயபுரம் மன்னர் இவருக்கு வழங்கிய பட்டம் கலைமகள் என்னும் பொருள் தரும் 'பாரதி' என்பதாகும்.
- படைப்புகள் - கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், பாரதியார் கவிதைகள் தொகுப்பு
- அறிந்த மொழிகள் - தமிழ், ஆங்கிலம், இந்தி, வங்காளம், பிரெஞ்சு, வடமொழி போன்றன.
- சிறப்புப் பட்டங்கள் - தேசிய கவி, மகாகவி, பாரதி, முண்டாசுக்கவிஞன், விடுதலைக்கவிஞன்
- காலம் - 1882 – 1921

**மையக்கருத்து**

உலகைக் காப்பவர் ஈசன். அவர் பெண்ணுக்கு ஞானத்தை வழங்கியுள்ளான். மூடர் சிலர் அதைக் கெடுக்கின்றனர். இந்த உலகம் அறிவில் சிறந்து விளங்க வேண்டுமென்றால் பெண்கல்வி போற்றப்படல் வேண்டும்.

**திரண்ட கருத்து**

- இந்த உலகத்தைப் பாதுகாத்து வளர்ப்பவன் ஈசன். அறிவின் முதிர்ச்சியே ஞானம் எனப்படும். அத்தகு ஞானத்தைப் பெண்களுக்கு வழங்கியிருப்பவன் ஈசன். ஆனால், இந்த உலகிலே வாழுகின்ற மூடர்களில் சிலர் பெண்களின் அறிவைக்கெடுத்து அவர்களை அடிமைகளாக்குகின்றனர்.
- இரண்டு கண்களில் ஒன்று ஆண், மற்றொன்று பெண். ஒரு கண்ணைக்குத்திக் காட்சி காணவிடாமல் கெடுப்பதைப் போல பெண்களை மட்டும் அடிமைப்படுத்தலாமோ?
- ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்குக் கல்வி கிடைக்கும்வரை ஆண்கள் பெண்களை மதிக்கமாட்டார்கள். தாழ்வாகவே நடத்துவார்கள். எனவே, பெண்கள் அறிவை வளர்த்தால்தான் உலகம் சமநிலைப்படும் என்பது பாரதியாரின் அழுத்தந்திருத்தமான கருத்து.

**சொல் நயம்**

ஞானத்தை, பேணி, மாதர், வையம், பேதமை, காணீர் ஆகிய நயம் மிகு சொற்கள் பொதிந்து, செய்யுளைப் படிப்போருக்கும், சிந்திப்போருக்கும் இனிமையை நல்குகின்றன.

**பொருள் நயம்**

'பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் ஈசன்' என்றார் பாரதியார். அறிவின் முதிர்ச்சியே ஞானம். அத்தகு ஞானம் மிகுந்த பெண்டிரை அடிமையாக்கக் கூடாது என்ற பாரதியாரின் எண்ணம் பொருள் நயம் மிக்கது.

**தொடை நயம்**

'தொடுக்கப்படுவதுதான் தொடை'. அழகிய மலர்களைக் கொண்டு மாலையைத் தொடுப்பதைப்போல, எதுகை, மோனை ஆகியவற்றால் தொடுக்கப்படுவதே தொடை ஆகும்.

**மோனை நயம்**

செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத்தொடுக்கப்படுவது மோனை நயமாகும்.

**அ) சீர் மோனை:**

<u>**பெ**</u>ண்ணுக்கு, <u>**பே**</u>ணி, <u>**பெ**</u>ண்கள், <u>**பே**</u>தமை, <u>**ம**</u>ண்ணுக்குள்ளே, <u>**மா**</u>தர், <u>**க**</u>ண்ணுக்குள்ளே, <u>**கா**</u>ட்சி

**ஆ) அடி மோனை:**

<u>**பெ**</u>ண்ணுக்கு, <u>**பெ**</u>ண்கள், <u>**ம**</u>ண்ணுக்குள்ளே, <u>**க**</u>ண்கள்

**எதுகை நயம்**

செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் முதல் எழுத்து **அளவொத்திருக்க**, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது எதுகை ஆகும்.

**அடி எதுகைச் சொற்கள்:**

பெ<u>**ண்**</u>ணுக்கு, ம<u>**ண்**</u>ணுக்குள்ளே, க<u>**ண்**</u>கள், பெ<u>**ண்**</u>கள்

**முரண் நயம்**

செய்யுளில், எதிரெதிர்ச்சொற்கள் இடம் பெற்றிருப்பதை முரண் என்போம்.

**முரண் சொற்கள்:** அறிவு – பேதமை

**இயைபு நயம்**

செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் இறுதி எழுத்து அல்லது அசை அல்லது சீர் ஒன்றி வருவது இயைபு ஆகும்.

அ) **சீர் இயைபு:**

வைத்தான் - ஈசன், சிலமூடர் - கெடுத்தார்

ஆ) **அடி இயைபு:**

கெடுத்தார் - காணீர்

**அணி நயம்**

***கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி***
***காட்சி கெடுத்திடலாமோ?***

என்ற அடிகளில் 'பிறிதுமொழிதலணி' பயின்றுவருகிறது.

- இந்த அடிகளின் மேலோட்டமான பொருள் என்னவென்றால், 'கண்கள் இரண்டில் ஒன்றை மட்டும் குத்திக் காட்சியைக் கெடுத்திடலாமோ?' என்பது.
- ஆனால், இரண்டு கண்களில் ஒன்று ஆண் என்றும், மற்றொன்று பெண் என்றும் நம்மை எண்ணவைத்து, அந்த இரண்டு கண்களுள் ஒரு கண்ணாகத் திகழும் பெண்டிரை அடிமைப்படுத்தலாமோ? ஆணாதிக்கத்தால் பெண்ணடிமை புரியலாமோ? என்று நம்மை உய்த்துணர வைப்பதால், இச்செய்யுளில் பிறிதுமொழிதலணி பயின்று இன்பமூட்டுகிறது.

**சந்த நயம்**

செவிகளுக்கு இனிய ஓசை தருமாறு புனையப்படுவதே சந்தம் ஆகும். யாப்பு அமைவினைச் சந்தம் என்போம். இசையுடன் பாடும் வகையில் இனிய ஓசையுடன் அமைந்து, தனிச்சொல் பெற்று வருவதால் இச்செய்யுள் சிந்துப்பா வகையைச் சேர்ந்ததாகும்.

**தலைப்பு**

**பெண் கல்வி**

**முடிவுரை**

பெண்ணின் பெருமை பேசி, பெண்ணடிமை கூடாது எனச்சொல்லி, இந்த உலகம் பெண்ணடிமை நீக்கி வாழ்ந்தால் அறிவில் சிறந்து வாழும் என, இலக்கிய நயங்கள் மிளிர மொழிந்த பாரதியின் செய்யுளைக் கண்டு மகிழ்ந்தோம். பெண்ணடிமை நீக்கி வாழ்ந்தோம் என்றால்,

***அந்த வானமும் வசப்படும், வாழ்வும் சுகப்படும்***
***வசந்தமோ நம்வீட்டு வாசலில் வண்ணக்கோலமிட்டு மகிழும்!***

**VII. நெடுவினா**

**அ) 41. "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்":**

**முன்னுரை :**

அடக்கமுடைமை திருக்குறளில் பதின்மூன்றாவது அதிகாரமாக இல்லறவியலில் அமைந்துள்ளது. அடக்கமுடைமை என்ற பண்புடன் நல்வாழ்வு வாழ்வது அறவாழ்வாகக் கருதப்படும் என்பதனை வள்ளுவம் வலியுறுத்திக் கூறுகின்றது.

**அடக்கமுடையின் சிறப்புகள் :**

- அடக்கமுடைமை என்னும் குணம் தேவருள் ஒருவனாக்கும். அடங்காமை கொடிய இருள்சூழ்ந்த நரகில் தள்ளி விடும்.
- அடக்கத்தைச் செல்வத்தைக் காப்பது போல பாதுகாக்க வேண்டும். அவ்வடக்கத்தைப் போல வளர்ச்சி (மேன்மை) தருவது வேறொன்றும் இல்லை.
- அறிய வேண்டியவற்றை அறிந்து நல்வழியில் அடக்கத்தோடு நடந்தால், அவ்வடக்கம் அடைய வேண்டியதை அடைந்து மேலும் சிறப்பினைத் தரும்.

**அடக்கமுடைமையால் வரும் நன்மைகள்:**

- தன்னிலையில் இருந்து தாழாது அடங்கியவனுடைய பொலிவு, மலைத் தோற்றத்தினும் மிகமிகப் பெரியதாகும்.
- எல்லாருக்கும் பணிதல் நன்மை தரும். அவருள்ளும் செல்வருக்கு அடக்கம் செல்வப் பயனைத் தரும்.
- உடலில் உள்ள ஐந்துறுப்பையும் அடக்கிக் கொள்ளும் ஆமைப்போல், ஐம்புலனையும் அடக்கும் ஆற்றல் பெற்றால், அவ்வடக்கம் ஏழு பிறப்பிலும் பாதுகாவலாய் அமையும்.

**நாவடக்கத்தின் தேவை:**

- எதனைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும். காவாது போனால் சொற்குற்றம் ஏற்பட்டுத் துன்பப்படுவர்.
- சொல்லில் ஒருசொல் தீயபயனைத் தருமானால் அ∴து எல்லா நன்மைகளையும் அழித்து தீமையை விளைவிக்கும்.
- தீயினால் சுட்டபுண் உள்ளே ஆறிவிடும். ஆனால் சொல்லால் சுட்டபுண் ஆறாது வடுவாய் சொன்னவரைக் காணும்போது துன்பத்தைத் தரும்.
- சினம் காத்து அடக்கமுடையவராக இருப்பவருக்கு அறக்கடவுள் அவர்வழி நின்று எல்லா நன்மைகளையும் தருவார்.

**முடிவுரை :**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

அடக்கமுடைமை அனைவருக்கும் சிறப்பினைத் தருவதோடு வாழ்வில் உயர்வினை அடையச் செய்யும். அறக்கடவுளும் அவர்வழி நிற்பார் என்பதனை வள்ளுவம் குறிப்பிடுகின்றது.

**(அல்லது)**

**வில்லிபாரதத்தில் கண்ணன் கன்னனிடம் வேண்டி நின்ற நிகழ்வுகள்:**

- அருணனால் செலுத்தப்படும் குதிரைகள் பூட்டப்பட்ட தேரினைக் கொண்ட சூரியனின் தோன்றலே! கடல் சூழ்ந்த இவ்வுலகில் வறுமையால் தளர்ச்சியுற்றோர்க்கு, வேண்டியவற்றைத் தருபவன் நீ என்பதைக் கேள்வியுற்றேன். மேருமலையில் தவம் செய்த நான், மிக்க வறுமைத் துயரால் பெருந்துன்பமுற்றேன். உன்னால் இயன்றதை இந்தக்கணத்தில் எனக்கு அளிப்பாயாக.
- அந்தணன் அவ்வாறு உரைத்ததும், அதனை வெற்றி பொருந்திய அருச்சுனனின் அம்புகளால் உடல் தளர்ந்து தேரின் மீது விழுந்த நிலையில் கன்னன், இருசெவிகளுக்கு அமுதம்போலக் கேட்டு, 'நல்லது' எனக்கூறி, நகைத்தவாறு "என்னால் தரத்தகுந்த பொருளை நீர் உரைப்பீர்" என மொழிந்தான். உடனே நான்கு வேதத்தவனும் (கண்ணன்) "நின் புண்ணியம் அனைத்தும் எனக்கு அளித்து உதவுக" என்றான். இதைக் கேட்ட கன்னன் உள்ளம் மகிழ்ந்தான்.
- என் உயிர்நிலை கலங்கியுள்ளது. அவ்வுயிர் உடலின் உள்ளேயோ வெளியேயோ அறியேன். பாவியாகிய நான், இரப்பார்க்கு வேண்டிய பொருள் எல்லாம் ஈந்த பொழுது நீ வரவில்லை. இதுவரை முடிவின்றிப் பயன் செய்யும் புண்ணியம் அனைத்தும் தருகிறேன். நீ பெற்றுக்கொள்வாயாக. உமக்கு நான்முகனும் ஒப்பாகான் என்றால், என் புண்ணியம் அதைவிட பெரியதோ?
- கன்னன், வேதியனாய் வந்த கண்ணனின் முன்னே கைகளைக் கூப்பி வணங்கினான். தன்னை வணங்காதார்க்குப் பேரிடியைப் போன்ற கண்ணன் மகிழ்வுடன் கன்னனை நோக்கி 'நீருடன்' தானம் செய்க என்றான். கன்னன் தன் மார்பில் தைத்த அம்பின் வழியே வரும் குரதியோடு சேர்த்துப் புண்ணியம் அனைத்தையும் தாரைவார்த்துக் கொடுத்தான். முன்பொருநாள் மாவலிச்சக்கரவர்த்தியிடம் வாமனனாய் வந்து மூன்றடிமண் தானம் பெற்று, மூன்றடியால் மூவுலகத்தையும் கவர்ந்த கண்ணன், தன் உள்ளங்கையில் குருதியை ஏற்றான்.
- தன் புண்ணியம் அனைத்தையும் தானமாக வழங்கிய, அழகியமாலை சூடிய கன்னனை மகிழ்வுடன் நோக்கிய கண்ணன் 'நீ வேண்டும் வரங்களைச் சொல்லுக. உனக்குத் தருகிறேன்' என்றான். கதிரவன் மகனான கன்னன் "பிறவித் துன்பங்களுக்குக் காரணமான தீவினையால் இன்னும் பிறவியெடுத்தாலும் எழுபிறப்பிலும் இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்று உரையாத உள்ளம் அளிப்பாய்" என்று கேட்டான்.
- கன்னன் வேண்டிய வரத்தைக் கேட்டதும் முக்கடவுளும் ஒரு மூர்த்தியான கண்ணன் உள்ளம் மகிழ்ந்து, கன்னனைத் தம்கைமலர்களால் தழுவி, செந்தாமரை மலரொப்பக் கண்களிலிருந்தும் தோன்றும் கருணை நீர் வெள்ளத்தில் ஆழ்த்தி. "கன்னா! நீ எத்தனை பிறவி எடுத்தாலும் அந்தப் பிறவிகளுள் கொடை செய்வதையும் அதற்கான செல்வத்தையும் எய்தி முடிவில் வீடுபேறு அடைவாய்" என்று உரைத்தான்.

**42. பௌத்த கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்கள்:**

- கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகியன சமணர்களின் தலையாய அறங்களாகும். சமணர்கள் கற்பித்தனர். படுக்கைகளில் அமர்ந்து மாணவர்கள் கற்றனர். 'படுக்கை' என்றால் பள்ளி. அதுவே, பின்னாளில் பள்ளிக்கூடம் என்றாயிற்று. சமணப்பெண் ஆசிரியர்கள், பெண் பள்ளிகளை நிறுவினார்கள்.
- காஞ்சிபுரத்தில் இருந்த பௌத்தப் பல்கலைக்கழகத்தில் தங்கி சீனப் பயணி 'யுவான் சுவாங்' சிறப்புரையாற்றியுள்ளார். இவற்றால் சமணமும், பௌத்தமும் தமிழகத்தின் கல்வி வரலாற்றுக்குச் செய்த பெரும்பங்கினை அறியலாம்.

**குருகுலக்கல்வி முறை:**

- மாணவர்கள் பல ஆண்டுகள் ஆசிரியர்களுடன் தங்கியிருந்து அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கல்வி கற்றனர்.
- செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற முறைகள் வாழ்வியலைக் கட்டமைத்தன.

**திண்ணைப் பள்ளிக்கல்விமுறை:**

- இங்கே, பாடத்திட்டம், பள்ளிநேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்தன.
- "திண்ணைப்பள்ளிகளின் தரம், ஐரோப்பிய நாடுகளின் கல்வித்தரத்தைக் காட்டிலும் உயர்ந்தது" என்றார் 'தாமஸ் மன்றோ'

**உயர்நிலைக்கல்வி முறை**

- இது புலவர்களிடம் தனிநிலையில் கற்கும் முறையாகும்.
- இவையே, பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகத்தில் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்கள் ஆகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

(அல்லது)

**இயற்கையோடு இயைந்த தமிழர்களின் வாழ்வு:**

**முன்னுரை :**

மலை, மனித சமூகத்தின் ஆதி நிலமாகும். தமிழ் அகத்திணையியல் மலை மற்றும் மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சி என்று குறிக்கும். குறிஞ்சி நிலம் சார்ந்த சங்கப் பாடல்கள் மலையோடு இயைந்த தமிழர்தம் சீரிய வாழ்வினைப் பேசுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர். பெருநிலப் பகுதிகளை ஆண்ட முடி மன்னர்களுக்குக் கூட வழங்காத பெருமையைப் பழந்தமிழர் இலக்கியங்கள் இக்குறுநிலத் தலைவர்களுக்கு அளித்துள்ளன.

**மலையோடு உள்ள தொடர்பு**

திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள் திராவிடர்களை 'மலைநில மனிதர்கள்' என்று அழைக்கிறார் கமிலசுவலபில். "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கிறது பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம். "விண் பெரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ என்கிறது பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படை. இவை தமிழர்கள் பண்டைக் காலத்தில் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்துள்ளனர் என்பதற்கு சான்றாகின்றன.

**மலைக்குடியிருப்புகள்:**

- திராவிடப் பழங்குடியினர் ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள். எனவே, அவர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியை விட உயரமான இடத்திலோடும் சிற்றாறுகள் ஓடைகளில் இருந்து நீரெடுத்துப் பருகுகின்றனர்.
- நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் எருமை கொட்டில்களைப் புனிதமான இடமாகக் கருதுபவர்கள். எனவே, அவற்றையும் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர்.
- குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் 'மெட்டு' என்ற சொல் அதன் உயரமான, மேடான அமைப்பை விளக்குகின்றது.
- ஆந்திராவிலும் ஒடிஸாவிலும் உள்ள 'ஜதாப்பு' எனப்படும் திராவிட பழங்குடியினர் குடியிருப்புகள் மலை உச்சிகளில் அமைந்துள்ளன.
- பழங்குடித் தலைவரின் வீடு, மற்ற வீடுகளை விட உயரமான இடத்தில் அமைந்துள்ளது.
- உயரமான மேடை, திண்ணை, சுற்றுச் சுவர்கள், மேலாடை, நீர் ஆகியவை திராவிடப் பழங்குடியினரின் வாழ்விட வடிவமைப்பிலும் வாழ்வியலிலும் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.

**இயற்கை அரண்கள் : செயற்கை அரண்கள்**

- தமிழ் மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.
- 'கோடு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு மலையுச்சி, சிகரம், மலை என்ற பொருளோடு வல்லரண், கோட்டை என்ற பொருளும் உண்டு. மலையரண், காட்டரண் போன்றவை இயற்கை அரண்கள் ஆகும்.
- மதில் சுவர்களால் அமைந்தவை செயற்கை அரண்கள். இவற்றில் இயற்கை அரண்கள் தொன்மையானவை.

**முடிவுரை :**

இங்ஙனம் இயற்கை நிறைந்த மலைப்பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்தனர். அதற்கு ஏற்றாற்போல் கடவுள்களையும், தான் வாழும் இடப்பெயர்களையும் அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர்.

***ஆ) பின்வரும் துணைப்பாடல் பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.***

**43. இனிக்கும் இன்சுலின் பற்றிய உரையாடல் வடிவம்:**

*சுந்தரும் பாலுவும் நண்பர்கள். சுந்தர் பாலுவைப் பார்க்க அவன் இல்லத்திற்கு செல்கிறான். அவர்களிடையே இல்லத்தில் நடக்கும் உரையாடலைக் காண்போம்.*

பாலு : ஏ வாடா! சுந்தர் வா. பாத்து ரொம்ப நாளாச்சு.
சுந்தர் : ஆமாம் பா. ஒரே வேலை. எங்கேயும் போக முடியல.
பாலு : ஏன்? வீட்டில் அனைவரும் நலம் தானே!
சுந்தர் : நலம் தான், ஆனால் அப்பாவிற்குதான் சர்க்கரை வியாதி.
பாலு : என்னப்பா இப்படி சொல்லுற?
சுந்தர் : ஆமாம் பா, எனக்கு கூட இருக்குது.
பாலு : உனக்குமா, மருத்துவரை சந்தித்தாயா?
சுந்தர் : சந்தித்தேன் பாலு, அவர் சொல்றத பார்த்தா பயமா இருக்கு.
பாலு : என்ன சொன்னார்?
சுந்தர் : இந்தியாவில் தான் 5 கோடி மக்களுக்கு சர்க்கரை வியாதி இருக்காம். இந்தியாதான் முன்னிலை வகுக்குதாம். இது 2030க்குள் எட்டுகோடி மக்களுக்கு உயருமாம். நீரிழிவுநோயை குணப்படுத்த முடியாது என மருத்துவர் கூறுகிறார்.
பாலு : என்னப்பா இப்படி சொல்ற?

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



சுந்தர் : ஆமாம் பா. இது, இதய நோய், சிறுநீரக செயலிழப்பு, கண்பார்வை குறைபாடு, நரம்பு மண்டல குறைபாடு என பல வியாதிகளை உருவாக்குமாம். இதுல மூன்று வகை இருக்காம்.

பாலு : என்ன அந்த மூன்று வகை?

சுந்தர் : முதல் வகை இன்சுலின் சார் நீரிழிவு நோய், இரண்டாம் வகை இன்சுலின் எதிர்ப்பு நீரிழிவு நோய், மூன்றாவதுவகை நீரிழிவு நோயின் அறிகுறிகளுடன் காணப்படுபவர்கள் ஆகும்.

பாலு : இதைப்பற்றி சோதனை மக்களிடம் நடத்தப்பட்டு இருக்கா?

சுந்தர் : ம். இந்திய அரசு 15 மாநிலங்களில் 5700 மக்களிடம் ஆய்வு நடத்தி அதில் 7.3% பேருக்கு உள்ளது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாலு : எதனால் நீரிழிவுநோய் ஏற்படுகிறது?

சுந்தர் : இன்சுலின் என்பது நாளமில்லாச் சுரப்பி உற்பத்தி செய்யும் ஹார்மோன் ஆகும். குளுக்கோஸ் உடலில் பல பகுதிகளுக்கு எடுத்துச் சென்று இயக்கி ஆற்றலை அளிப்பது இன்சுலின் ஆகும். சர்க்கரையின் அளவு சீராக இருப்பதற்கும் இன்சுலின் அவசியம் ஆகும். இன்சுலின் அதன் பணியில் குறைபாடு ஏற்படும் போது சர்க்கரை குறைவு, அல்லது அதிகம் ஏற்படுகிறது. இதுவே சர்க்கரை வியாதி அல்லது நீரிழிவு நோய் எனப்படும்.

பாலு : ஓ. அப்படியா? இதைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்யப்பட்டதா?

சுந்தர் : ம். 1889 ல், ஆஸ்கர் மின்கோஸ்கி, ஜோசப் வாள்மெரிங் ஆகிய, இவர்களே சர்க்கரைக்கும் கணையத்திற்கும் உள்ள தொடர்பை முதன்முதலாக அறிவித்த அறிவியல் அறிஞர்கள் ஆவர்.

பாலு : இன்சுலின் என்று பெயரிட்டவர் யார்?

சுந்தர் : 1910-ல் கணையத்தில் உள்ள லாங்கர்ஹான் திட்டுகளை ஆராயத் தொடங்கிய சர் எட்வர்டு ஆல்பர்ட் ஹார்போசா.ஃ.பே என்ற அறிஞர் சர்க்கரை நோயாளிக்குக் கணையத்தில் ஒரு வேதிப்பொருள் குறைவதைக் கண்டறிந்து, அதற்கு இன்சுலின் எனப் பெயரிட்டார்.

பாலு : இவருக்கு வேறு யாரெல்லாம் உதவினார்கள்?

சுந்தர் : ஜே.பி.காலிஸ், ஜான்மகலியாட் ஆவர். இவர்கள் நால்வரும் பிறகு பாக்டீரியாலிருந்து செயற்கை மனித இன்சுலினை, 1978 ல் உருவாக்கினர்.

பாலு : உலகம் முழுவதும் நீரிழிவு தினமாக இந்த நாளைதான் கடைபிடிக்கிறார்களா?

சுந்தர் : இல்லை. பான்டிங்கின் பிறந்தநாளான நவம்பர்-14. இதனை 1991 முதல் நீரிழிவு தினமாய் கடைப்பிடிக்கிறார்கள்.

பாலு : சர்க்கரை குறைபாடு வருவதற்கான காரணம் என்ன?

சுந்தர் : பட்டை தீட்டப்பட்ட தானியங்களை பயன்படுத்துவது, உணவு உண்பதில் ஒழுங்கின்மை, மன அழுத்தம், உழைப்பு இன்மை ஆகும்.

பாலு : இதற்கு மாற்று மருத்துவம் இல்லையா?

சுந்தர் : ம், இருக்கிறது, சித்த மருத்துவம், ஆயர்வேத மருத்துவம்.

பாலு : அப்படியானால் அதைப் பின்பற்றலாமே!

சுந்தர் : எல்லா வகை மருத்துவத்தின் அடிப்படையும் உடற்பயிற்சி, உழைப்பு, சரிவிகித உணவு, யோகாசனம், சர்க்கரை குறைவான உணவு வகைகள் போன்றவையே ஆகும்.

பாலு : எந்த வகையான உணவுகள்?

சுந்தர் : கீரை வகைகள், சர்க்கரை அளவு குறைந்த பழங்கள், காய்கறிகள், மிகுதியாக சேர்த்துக் கொள்ளவேண்டும். துரித உணவுகளை தவிர்க்க வேண்டும்.

பாலு : இந்த நீரிழிவு நோய் அனைவருக்கும் வருமா? எப்படி கண்டுபிடிப்பது?

சுந்தர் : வரலாம், இதனை பரிசோதனை மூலம் தான் கண்டுபிடிக்க முடியும். வருடந்தோறும் ஒரு முறையாவது இதற்கான சோதனை செய்து நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

பாலு : நமக்கு இருப்பதாக தெரிந்தால் என்ன செய்வது?

சுந்தர் : வள்ளுவர் கூறிய 'யாகாவாராயினும் நாகாக்க' என சொன்னதை நாம் உணவிலும் கடைபிடித்தால் சர்க்கரை பகைவனை வெல்லலாம்.

பாலு : ரொம்ப நன்றி, சுந்தர் உன் மூலமாக நீரிழிவு நோய் பற்றி தெரிந்து கொண்டேன். இனி கவனமாக இருப்பேன்.

சுந்தர் : நீ மட்டும் கவனமாக இருந்தால் போதாது. அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பாலு : சரி சுந்தர்

[சுந்தர் அவன் இல்லத்திலிருந்து கிளம்பி தன் இல்லம் செல்கிறான்.]

**(அல்லது)**

**நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவை:**

- திருநங்கை நர்த்தகி நடராஜ் ஒரு பரதநாட்டிய கலைஞர். இவர் வைஜெயந்தி மாலாவின் நடனத்தால் ஈர்க்கப்பட்டு, அவரின் ஆசிரியரான தஞ்சை கிட்டப்பாவிடம் நடனம் பயில விரும்பினார். ஒரு வருட போராட்டத்துக்குப் பிறகு தஞ்சை கிட்டப்பா அவர்கள் நடனம் கற்றுத்தர இசைவு அளித்தார்.
- கிட்டப்பா அவர்கள் தான் இவருக்கு 'நர்த்தகி' என பெயர் சூட்டியவர். நர்த்தகி பெண்மையை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாக பரத நாட்டியத்தை கருதினார். தொடக்கத்தில் திரைப்படங்களில் வரும் நடனம் அவரை ஈர்த்தது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- சங்ககால இலக்கியம் முதல் நவீன கவிதை வரையிலும் நர்த்தகி நடனமாடி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். ஜப்பான் நடன கலை நிகழ்ச்சியில் ஜப்பானியர்கள், திருவாசக, தேவார பண்ணிசைப்பாடல்களின் அபிநயத்தில் கண்கலங்கியது மறக்க முடியாத நிகழ்வு என அவர் நினைவுகூர்ந்தார்.
- கலையின் வழியாகப் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்கின்றன என நர்த்தகி முழுமையாக நம்பினார். அவர் வழக்கறிஞர் ஆவதையே முழுமுதல் இலட்சியமாகவே கொண்டிருந்தார். தற்போது நர்த்தகி அவர்கள் இதழ்கள் எழுதுவதோடு, தமிழ் இலக்கிய மேடைகளிலும் பேசி வருகிறார். சங்கப்பாடல்கள், திவ்வியப்பிரபந்தம், திருப்புகழ் மற்றும் தேவாரம் ஆகியவற்றை நடனம் மூலம் பரப்புவதோடு அதனைப் பற்றி ஆராய்ச்சியும் செய்து வருகிறார்.
- நர்த்தகி அவர்கள் வெள்ளியம்பலம் அறக்கட்டளை நடனக்கலைக்கூடம் வாயிலாக நூற்றுக்கணக்கான மாணவிகளை உருவாக்கி வருகிறார். இவர்தாம் ‘திருநங்கை’ என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர்.
- இன்று நர்த்தகி, தன்னுடைய நடனத் திறமையால் அமெரிக்கா, லண்டன், கனடா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதும் பயணித்துத் தம் பரதத்தால் பல்லாயிரக்கணக்கான மேடைகளை அழகாக்கி வருகிறார்.

**VIII.**

44. **அ) புறநானூற்றுப்பாடல்:**

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.”

**- கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

**ஆ) பொருட்டு என முடியும் குறள்:**

“தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கவர்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.”



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள் - 2

(புதிய வினாத்தாள் வடிவமைப்பு)

# பொதுத்தமிழ் - மேல்நிலை முதலாமாண்டு - 2019

காலஅளவு: 2.30 மணி மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி – அ (செய்யுள், உரைநடை)

**I.** பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.) 6x1=6

1. **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.**

அ) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்

ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்

இ) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை

ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் எழுத்து மொழியும்

(i) அ,ஆ (ii) அ,ஈ (iii) ஆ,ஈ (iv) அ,இ

2. 2011ம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது பெற்ற இந்திரனின் நூல்

அ) பறவைகள் ஒரு வேளை தூங்கப்போயிருக்கலாம்

ஆ) முப்படை நகரம்

இ) சாம்பல் வார்த்தைகள்

ஈ) வெளிச்சம்

3. புல்லின் இதழ்கள் என்ற நூலை எழுதியவர் யார்?

அ) வால்ட் விட்மன் ஆ) ஸ்டெ.ஃபான் மல்லார்மே இ) பாப்லோ நெரூடா

4. வளைஇ, அலைகடல் ஆகியவற்றின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை, சொல்லிசையளபெடை

ஆ) சொல்லிசையளபெடை, வினைத்தொகை


இ) இன்னிசையளபெடை, பண்புத்தொகை

ஈ) செய்யுளிசையளபெடை, வினைத்தொகை

5. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

6. படத்திற்குப் பொறுத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க




அ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து

ஆ) இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

இ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

ஈ) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

பகுதி – ஆ (இலக்கணம், மொழிப்பயிற்சி)

**II.** பலவுள் தெரிக. 8x1=8

7. இனிதென - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதியை வரிசைப்படுத்து

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



8. "கபாடபுரங்களைக் காவு கொண்டபின்னும் காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்"- அடி மோனையைத் தெரிவு செய்க.
   அ) கபாடபுரங்களை – காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
   இ) கபாடபுரங்களை – காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத
9. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை ……..
   அ) துள்ளல் ஆ) செப்பல் இ) அகவல் ஈ) தூங்கல்
10. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
   அ) காய்முன் நேர் ஆ) காய்முன்நிரை இ) கனிமுன் நிலை ஈ) மாமுன் நேர்
11. தமிழ்ச்சொல்லைக் கண்டறிக. Agreement
   அ) ஆவணம் ஆ) உப்பங்கழி இ) ஒப்பந்தம் ஈ) விவாதம்
12. பகுபத உறுப்புகளில் "விகுதி" வெளிப்படுத்தி உணர்த்துபவை
   அ) திணை, பால், எண், இடம் ஆ) இடைநிலை, உயிர்ஈறு, மெய்ஈறு
   இ) சந்தி, சாரியை, விகாரம் ஈ) எச்சம், முற்று, வேற்றுமை
13. வலி, வழி என்பதன் பொருள்
   அ) காற்று, பாதை ஆ) பாதை, காற்று இ) வலிமை, பாதை ஈ) காற்று, வலிமை
14. "னகர" "நகர" வேறுபாடு உணராது எழுதும் பிழை
   அ) இனவெழுத்துப் பிழை ஆ) மயங்கொலிப்பிழை இ) இலக்கணப்பிழை ஈ) எழுத்துப்பிழை

**[செய்யுள், உரைநடை]**

**III. அ) குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு விடை தருக) 3x2=6**

15. இனம், மொழி குறித்து இரசூல்கம்சதேவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. "காவடிச்சிந்து" என்பது யாது?
17. புறநானூறு மூலம் அறியலாகும் செய்திகள் யாவை?
18. உமறுப்புலவர் - குறிப்பு எழுதுக.

**ஆ) குறுவினா (எவையேனும் இரண்டனுக்கு விடை தருக) 2x2=4**

19. தமிழ்நாட்டின் மாநில மரம் குறிப்பு வரைக.
20. மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமையாக நோம் சோம்ஸ்கி எதனைக் கூறுகிறார்?
21. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

**IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7X2=14**

22. இலக்கணக் குறிப்பு: அ) தீம்பால் ஆ) உடை அணிந்தேன்
23. பூவரகு, மாசற்றார் - புணர்ச்சிவிதி தருக.
24. பிறமொழி சொற்கல்: அ) இலஞ்சம் ஆ) உத்தியோகம்
25. பகுபத உறுப்பிலக்கணம்: அ) துஞ்சல் ஆ) பெற்ற
26. பொருத்துக:
   அ) த், ட், ற், இன் - எதிர்கால இடைநிலைகள்
   அ) கிறு, கின்று, ஆநின்று - இறந்தகால இடைநிலைகள்
   இ) ப், வ் - எதிர்மறை இடைநிலைகள்
   ஈ) ஆ, அல், இல் - நிகழ்கால இடைநிலைகள்
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
   அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
28. நிறுத்தற்க்குறிகளை இட்டு எழுதுக.
   அ) பவணந்தி முனிவரை மைசூரின் கோலார்ப் பகுதியை ஆண்ட சீயங்கள் என்பவர் ஆதரித்தார்
29. மரபு பிழையை நீக்கி எழுதுக.
   அ) கரும்புத் தோப்புக்குள் சென்றேன் ஆ) காகம் கத்தும்
30. பொருள் வேறுபாடு: அ) குரை ஆ) குறை

**V. சிறுவினா**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8**

31. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
32. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x4=8**

34. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?
35. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
36. "சித்தர்கள் சமூக உணர்வு கொண்டவர்கள்" இக்கூற்றை நும் பாடப்பகுதி வழியாக மெய்ப்பிக்க.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** **3x4=12**

37. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்து எழுதுக.

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம் போல வரும் வெண்ணிலாவே!

வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வேண்ணிலாவே!

கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வேண்ணிலாவே!

- கவிமணி

38. தமிழாக்கம் தருக.
   1) Knowledge rules the world 2) A picture is worth a thousand words
   3) Time is gold 4) All the glitters are not gold

39. சொற் பொருள் பின்வருநிலையணி (அல்லது) வேற்றுமை அணி (எவையேனும் ஒரு அணிக்கு விடையளி)
40. திணை அல்லது துறை (எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி)

**VII. நெடுவினா (இரண்டனுக்கு மட்டும்)** **2x6=12**

அ) 41. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை தென்கரை நாட்டுப்பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரி.

**(அல்லது)**

பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவி என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

42. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

**ஆ) பின்வரும் துணைப்பாடல் பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.** **1x6=6**

43. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரிப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

**VIII. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

44. அ) குறுந்தொகை பாடல் "அம்மவாழி தோழி"
   ஆ) "விடற்கு" என முடியும் திருக்குறள்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள் - 2
# பொதுத்தமிழ் - மேல்நிலை முதலாமாண்டு - 2019
## விடைக்குறிப்புகள்

பகுதி – அ (செய்யுள், உரைநடை)

**I. பலவுள் தெரிக.**

1. iii) ஆ, ஈ
2. அ) பறவைகள் ஒருவேளை தூங்கப்போயிருக்கலாம்
3. அ) வால்ட் விட்மன்
4. ஆ) சொல்லிசையளபெடை, வினைத்தொகை
5. ஆ) அண்ணாமலையார்
6. இ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
   வாய்நாடி வாய்ப்பச் செயல்

பகுதி – ஆ (இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

7. அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
8. இ) கபாடபுரங்களை – காலத்தால்
9. இ) அகவல்
10. ஈ) மாமுன் நேர்
11. இ) ஒப்பந்தம்
12. அ) திணை, பால், எண், இடம்
13. இ) வலிமை, பாதை
14. ஆ) மயங்கொலிப்பிழை

**III. அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம் கூடில்லாத பறவை.
- இரசூல் கம்சதேவ்

**16. காவடிச்சிந்து:**

பண்டையக் காலம் முதல் தமிழ்நாட்டில் வழக்கிலுள்ள இசை மரபே 'காவடிச்சிந்து' எனப்படும்.

**17. புறநானூறு மூலம் அறியலாகும் செய்திகள்:**

பழந்தமிழரின் நாகரிகம், செல்வம், மக்களின் வாழிடங்கள், போர் நிகழ்வுகள், அரசர்கள் வரலாறு, குறுநில மன்னர்களின் வரலாறு மட்டுமின்றி அறிவியல்சார்ந்த செய்திகளையும், சில பாடல்கள் மூலம் அறியலாம்.

**18. உமறுப்புலவர்:**

- எட்டயபுரத்தின் அரசவைப் புலவர்.
- கடிகை முத்துப் புலவரின் மாணவர்.
- நபிகள் நாயகத்தின் மீது முதுமொழி மாலை என்ற நூலை இயற்றியுள்ளார்.
- வள்ளல் சீதக்காதி, அப்துல் காசிம் மரைக்காயர் ஆகியோர் இவரை ஆதரித்தனர்.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**19. தமிழ்நாட்டின் மாநில மரம்:**

- தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம்.
- பனைமரம் ஏழைகளுடைய கற்பக விருட்சம்.
- சிறந்த காற்றுத் தடுப்பான். ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மையுடையது.
- பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி தயாரிக்கலாம்.

**20. மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமையாக நோம் சோம்ஸ்கி கூறுவது:**

- மொழியும் அதனை இலக்கண விதிப்படி பேசுவதும் மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமை.
- நாம் பிறக்கும் போதே சில ஆழ்ந்த அமைப்புகளுடன் பிறக்கிறோம் என்றும் அந்த அமைப்புகளில் இலக்கண விதிகளை அர்த்தம் பண்ணிக்கொள்ளும் திறமையும் பொதிந்திருப்பதே மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமை என்று நோம் சோம்ஸ்கி கூறுகிறார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**21. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள்:**

- நாகசுரம்
- வேசரம்
- திராவிடம்

**IV.** ***எவையேனும் ஏழனுக்கு விடை தருக.***

**22. இலக்கணக்குறிப்பு:**

**அ) தீம்பால் - பண்புத்தொகை**
**ஆ) உடை அணிந்தேன் - இரண்டாம் வேற்றுமைத் தொகை**

**23. புணர்ச்சி விதி:**

**அ) பூவழகு – பூ + அழகு**

விதி: 'ஏனை உயிர்வழி வவ்வும்' என்னும் விதிப்படி
= பூவ் + அழகு என்றானது

விதி: 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி
= பூ (வ் +அ) ழகு
= பூவழகு என்றானது.

**ஆ) மாசற்றார் – மாசு + அற்றார்**

விதி: 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிப்படி
= மா (சு = ச்+ உ) + அற்றார்

விதி: 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி
= மா (ச் +அ) ற்றார்
= மாசற்றார் என்றானது.

**24. பிறமொழிச் சொற்கள்:**

**இலஞ்சம் - கையூட்டு**
**உத்துயோகம் - பணி**

**25. பகுபத உறுப்பிலக்கணம்:**

**அ) துஞ்சல் – துஞ்சு + அல்**
துஞ்சு - பகுதி
அல் - தொழிற்பெயர் விகுதி

**ஆ) பெற்ற – பெறு + அ**
பெறு – பகுதி; பெற்று – ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது
அ – பெயரச்ச விகுதி.

**26. பொருத்துக:**

அ) த், ட், ற், இன் - இறந்தகால இடைநிலைகள்
அ) கிறு, கின்று, ஆநின்று - நிகழ்கால இடைநிலைகள்
இ) ப், வ் - எதிர்கால இடைநிலைகள்
ஈ) ஆ, அல், இல் - எதிர்மறை இடைநிலைகள்

27. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளைப் புரிந்து பேசுவர்.

28. பவணந்தி முனிவரை, "மைசூரின் கோலார்ப்" பகுதியை ஆண்ட சீயங்கள் என்பவர் ஆதரித்தார்.

29. அ) கரும்புத் ***தோட்டத்திற்குள்*** சென்றேன்
ஆ) காகம் ***கரைந்தது.***

30. **பொருள் வேறுபாடு:**

அ) குரை - தெரு நாய் குரைக்கிறது
ஆ) குறை - இவன் குறை வைத்தான்.

**V.** ***சிறுவினா***

*அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*

**31. காற்றின் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு:**

காற்றின் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு தூக்கணாங் குருவியின் கூடுகள் ஆகும். ஏனெனில், முன்பு நல்ல மழைபெய்து ஆற்றில் நீர் புரண்டோடும். கரையெல்லாம் நெடுமரங்கள் தழைத்து வளர்ந்திருக்கும். அந்த நெடுமரங்களில், தூக்கணாங் குருவிகள் புல்லினால் அமைத்த வீடுகள், அழகாக அசைந்தாடிக் கொண்டிருப்பதை அழகிய பெரியவன் ஒப்பீடு செய்கிறார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**32. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து:**

(i) காவடி தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று.

(ii) உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கம்.

(iii) பண்டையக்காலம் முதல் நாட்டார் வழக்கில் உள்ள இசைமரபாம் "காவடிச்சிந்து" தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் எனில் மிகையாகாது.

**33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன:**

சிங்கி பல இடங்களுக்குச் சென்று குறி கூறியதன் மூலம் பல சன்மானம் பெற்றாள். அவள் பெற்ற பரிசுப் பொருள்களை குற்றாலக் குறவஞ்சி பின்வருமாறு பட்டியலிடுகிறது.

(i) சேலத்து நாட்டில் குறி சொல்லிப் பெற்ற பரிசு சிலம்பு

(ii) கோலத்து நாட்டார் (கலிங்க) கொடுத்த பரிசு தண்டை

(iii) பாண்டியனார் மகளுக்காக குறி சொல்லிப் பரிசு பெற்ற பாடகம்

(iv) குற்றால நாதர் சந்நிதிப் பெண்கள் வழங்கியது கெச்சம்

(v) முன்பொரு நாள் கண்டிய தேசத்தில் பெற்றது காலாழி என்று சிங்கி பெற்ற பரிசுகளைக் குறிப்பிடுகிறது.

***ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.***

**34. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி:**

- நம்முடைய முன்னோர்கள் வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை எல்லாவற்றையும் நன்கு இடித்து கோமியத்தில் ஊறவைத்து பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்தனர்.
- இப்போதும் இவ்வாறு மேற்கூறிய முறையில் வேதிக்கலப்பில்லா, பூச்சிக்கொல்லி மருந்தை தயாரித்து பயன்படுத்தினால் சிறிது, சிறிதாக பூச்சிகள் குறைக்கப்படுவதோடு மண்ணின் நுண்ணுயிர் பெருக்கமும் காக்கப்படுவது சாத்தியமே ஆகும்.

**35. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர்:**

- ஆனந்தரங்கர் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருடைய நாட்குறிப்புகள் இருபத்தைந்து ஆண்டு காலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவன. அக்காலத்தில பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்றுக் கருவூலமாகவும் இவருடைய நாட்குறிப்புகள் திகழ்கின்றன..
- தேவனாம் பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ்பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள், தஞ்சைக் கோட்டைமீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகையிட்டது முதலியவற்றையெல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாட்குறிப்பில் குறித்துள்ளார்.

**36. "சித்தர்கள் சமூக உணர்வு கொண்டவர்கள்":**

- சித்தர் என்றதும் முதலில் நம் நினைவுக்கு வருவது அவர்தம் சமூக உணர்வே சமூகத்தில் நிலவும், கண்மூடிப் பழக்கவழக்கம், மூட நம்பிக்கை, பொருளற்ற செயல், போலிச் சடங்குகள் இவற்றை நெஞ்சுரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் கடுமையாகச் சாடியவர்கள் சித்தர்கள்.
- சாதிக்கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைந்தவர்கள் "சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்" என்று பாம்பாட்டிச் சித்தரும் அகமத்தின் சொற்படியே சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம் என்று பத்திரக் கிரியர் கூறுவது மூலமும் அவர்கள் சமூக உணர்வை அறியலாம்.

**VI. *எவையேனும் மூன்றனுக்கு விடையளி.***

**37. திரண்ட கருத்து:**

*"வாழைக்கு அழகு குருத்து*
*பாடலுக்கு அழகு கருத்து"*

கோடி கோடி விண்மீன்கள் சூழ்ந்து இருக்க அதில் வெள்ளியோடம் போல் இருக்கும் வெண்ணிலாவே என்றும், வளர்ந்து வளர்ந்து முழுநிலவாக வரும் நீ மீண்டும் வாடி வாடி போவது எதனாலோ என்றும்; நாங்கள் உன்னை பந்தை அடிப்பது போல் அடிப்போம் என்று நீ உலகில் வர பயம் கொள்கிறாயோ என்று நிலவோடு பேசும் உயிரோவியத்தை நயத்தோடு இயம்புகிறார் கவிமணி அவர்கள்.

**மையக் கருத்து:**

கவிமணி அவர்கள் வெண்ணிலாவை உவமைப்படுத்தி அழகாகப் பாடியுள்ளார்.

**மோனை நயம்:**

ஒரு செய்யுளில் சீரகளிலோ அடிகளிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை நயம் ஆகும்.

எ.கா: **வ**ளர்ந்து - **வ**ந்த – **வ**ரும்; **கூ**கை - **கூ**ட்டினில் **வெ**ண்ணிலாவே – **வெ**ள்ளியோடம்; **ப**ந்தடிப்போம் - **பா**ரில்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**எதுகை நயம்:**

ஒரு செய்யுளில் சீர்களிலோ அடிகளிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது எதுகை நயம் ஆகும்.

எ.கா: வெண்ணிலாவே – மீண்டும்; வெள்ளியோடம் - வளர்ந்து ஆந்தைபோல – பந்தடிப்போம்; கூகை – பகல்; மீன்கள் - உன்னையென்று.

**அணி நயம்:**

***"அணியற்றப் பாடல் அழகற்றுப் போகும்"***

இப்பாடலில் உவமையணி பயின்று வந்துள்ளது.

38. **தமிழாக்கம்:**

1. அறிவே உலகை ஆள்கிறது
2. ஒரு புகைப்படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமமானது
3. காலம் பொன் போன்றது
4. மின்னுவதெல்லாம் பொன் அல்ல.

39. **அ) சொற்பொருள் பின்வரும் நிலையணி:**

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும், மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

**சான்று:**

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

**அணி விளக்கம்:**

இக்குறளில் 'வலி' என்னும் சொல் 'வலிமை' என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

**ஆ) வேற்றுமை அணி:**

இரு பொருள்களுக்கிடையே உள்ள ஒப்புமையை முதலில் கூறிப் பின்னர் அவற்றுக்கிடையே வேற்றுமை தோன்றக் கூறுவது வேற்றுமை அணி.

**சான்று:**

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

**அணி விளக்கம்:**

தீயினாலும் புண் உண்டாகும், நாவினாலும் புண் உண்டாகும் என முதலில் கூறி பின்னர் தீயினால் உண்டான புண் ஆறிவிடும். ஆனால் நாவினால் உண்டான புண் ஆறாமல் வடுவாக மாறிவிடும் என வேறுபடுத்திக் கூறுவதால் இக்குறட்பாவில் வேற்றுமை அணி பணின்றுள்ளது.

40. **அ) திணை (பொதுவியல் திணை)**

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**ஆ) துறை (பொருண்மொழிக் காஞ்சி)**

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும்.

**VII.** நெடுவினா

41. **திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை தென்கரை நாட்டுப்பாடல்கள் வழி இயற்றை வளங்கள்:**

➢ **முன்னுரை :**

பெரியவன் கவிராயர் என்பவர் இயற்றிய திருமலை முருகன் பள்ளு என்னும் நூலில், தென்கரையாகிய குற்றாலம் வடகரையாகிய திருமலை இவற்றின் வளம் கூறுவது மூலம் உணர்த்தும் இயற்கை வளங்களாவன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



- **வடகரை நாட்டின் இயற்கை வளம்:**
  - வண்டுகள் மலர்களில் மொய்த்து இந்தளம் என்னும் பண்ணை ரீங்காரமிடும். வண்டுகளின் இசைகேட்டு மடையிடையே மதகுகளை இணைக்கும் சங்கிலியில் மீனைப் பிடிக்க அமர்ந்திருக்கும் உள்ளான் பறவை வாலை ஆட்டும்.
  - தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப்பாயும் முத்துகளை ஈன்ற வெண்சங்குகள் நிறைந்து காணப்படும்.
  - "சலச வாவியில் செங்கயல் பாயும்
    தரளம் ஈன்ற வெண்சங்கயல"

- **தென்கரை நாட்டின் இயற்கை வளம்:**
  - தென்கரையாகிய குற்றாலம் சோலைகளையுடையதாய் காணப்படுகிறது.
  - நீண்டு வளர்ந்த சோலை மரங்களுக்கிடையே மேகக்கூட்டங்கள் தங்கிச் செல்லும். அகிற்புகை கமழும் பொன்னால் ஆன மாட மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.

    "மாடம் எங்கும் அகிற்புகை நாறும்
    குளிரும் மஞ்ஞையும் கொண்டலும் காக்கும்"
  - குளக்கரைகளில் மோதும் அலைகளினால் கரையெங்கும் முத்துகள் சிதறி வெடிக்கும்.

    "முத்து ஏந்தி வாவித்தரங்கம் வெடிக்கும்"

- **முடிவுரை :**

  திருமலைச்சேவகன் முருகக்கடவுள் வீற்றிருக்கும் "திருமலை" யான வடகரைநாடு, குற்றாலநாதர் கோயில் கொண்டுள்ள தென்கரை நாடான குற்றாலம் ஆகிய இரு நாடுகளின் சிறப்புகள் மூலமாக, இவ்விரு நாடுகளிலும் இயற்கை வளம் மிகுந்து காணப்படுகிறது என்பதை உணரலாம்.

**(அல்லது)**

**பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவி என்பதை உதாரன் பாத்திரம்:**

- **முன்னுரை:**

  தன் கவிதை வரிகளால் இளைய சமுதாயத்தைத் தட்டியெழுப்பிய பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் என்பதற்கு அவர் எழுதிய "புரட்சிக்கவி" என்னும் காவியத்தில் படைக்கப்பட்ட உதாரன் பாத்திரம் வாயிலாகப் பேசப்படும் கருத்துக்கள் சிறந்த சான்றாகும்.

- **கடைசிப் பேச்சு:**

  கொலைக்களத்தில் உதாரன் பேசும் கருத்துக்கள் அத்தனையும் புரட்சிக் கவிஞரின் கருத்துக்களே.

- **யார் தோள்கள்:**
  - நிலத்தை கிழித்து ஓடும் நீரோடைகள், அடர்ந்த நெடுமரங்கள் நிறைந்த பெருங்காடுகள், ஓடுகின்ற பெருவிலங்குகள், கூர்மையாக கூழாற்கற்கள் நிறைந்த மலைச்சிகரங்கள் அவற்றின் பிளவுகளில் தங்கியிருக்கும் பாம்புக் கூட்டங்கள் இவற்றோடு போராடி பாழ்நிலத்தை பயன்படுத்தி, புதிய நகரங்களை அழகுபட உருவாக்கித் தந்தவர் உழைப்பாளர்கள் தானே என்பது மூலம் "ஒரு நாட்டின் முன்னேற்றம் உழைப்பாளர்கள் கைகளில் தான்" என்ற புரட்சிகரமான சிந்தைனையை உதாரன் மூலம் பாவேந்தர் வெளிப்படுத்துகிறார்.
  - சிற்றூர் வரப்பு அமைந்த வயல்வெளி தேக்கப்பட்ட ஆற்றுநீர். அதனை முறைப்படுத்திக் கொண்டு செல்லும் வாய்க்கால். நிலத்தைப் பயன்படுத்தி, நன்செய் நிலமாக்கி, நெல் விளையச் செய்த நிறை உழைப்புத் தந்ததும் உழைப்பாளரின் தோள்களே என்று உரத்த குரலில் உதாரன் மூலம் புரட்சிக் கவிஞர் கூறுகிறார்.

    "சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
    தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி
    நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
    நிறை உழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்"

- **எவரின் மூச்சு:**

  கல்லைப் பிளந்து, மலையைப் பிளந்து, இயற்கை கனிம வளங்களான, இரும்பு, நிலக்கரி, மாணிக்கம், நவரத்தினங்கள் ஆகியவற்றைக் கொண்டு வர உயிரைப் பணயம் வைத்து, மூச்சு அடக்கி கொண்டு வந்த மூச்சு எவரின் மூச்சு.

  "பொற்றுகளை கடல் முத்தை மணிக்குலத்தை
  போய் எடுக்க அடக்கிய மூச் செவரின் மூச்சு"

  என்று உழைப்பாளர் சிறப்பை பாரதிதாசன் உதாரன் மூலம் கூறுகிறார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**42. மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியும் எழுத்து மொழியும்:**

**முன்னுரை:**

கண்டது, கேட்டது, படித்தது இவற்றை எண்ணிப் பார்க்கும் போது நான் மொழியில் மிதந்து கொண்டு தான் பிறந்தேன் என்பது போல் உணர்கிறேன். உலகத்தை என்னுள் கட்டமைத்த மொழியை, வெளிப்படுத்தும் போது பேச்சு மொழியையும், எழுத்து மொழியையும் உணர்வுப்பூர்வமாகவே வெளிப்படுத்துகிறேன்.

**வாளினும் வலிமை பேச்சுமொழி:**

- மொழி வழியாக ஒன்றைப் பெயரிட்டுப் பேச்சு மொழி வழியாக அதனை அழைக்கத் தொடங்கும் போது அதன் மீது எனக்கு ஒரு அதிகாரம் ஏற்படுவதை உணர்கிறேன்.
- பேச்சுமொழி உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. பேச்சு என்பது தன்னைத் தானே திறந்து காட்டும் செயல்பாடு. அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம் என்பதற்கேற்ப பயன்படுத்தி பொருள் வேறுபாடுகளை என்னால் ஏற்படுத்த முடியும் என உணர்கிறேன்.
- பேச்சு மொழி என்பது மொழியில் நீந்துவது என் அபிநயங்கள், உடல் மொழிகள் உடலின் செயல்பாடுகள் என்னுடைய "பேச்சுமொழி" வெளிப்பாட்டில், வெளிப்படுவதால் பேச்சு மொழியை வாளினும் வலிமை உடையதாக உணர்கிறேன்.

**எழுத்து மொழி:**

- என்னிடம் கீழ்ப்படிந்து இருக்கும் என் மொழி, எழுத்து மொழியாக பதிவு செய்யப்படும் போது, உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலை அடைந்துவிடுகிறது.
- எழுத்து மொழியாய் மாறும் போது என் மொழி என்னைவிட்டுப் பிரிவதாக உணர்கிறேன்.
- எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க எதிரொளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து தனக்குத் தானே பேசிக்கொள்வது போன்று என உணர்கிறேன்.
- எழுத்து மொழியில் ஏற்றம், இறக்கம் என எந்த உணர்வும் வெளிப்படுத்துவதில்லை. எழுதும் வேலையை மட்டும் தான் "கை" என்னும் உறுப்பு செய்கிறது. வேறு எந்த உணர்வுக்கும் இடமில்லை என்பதையும் உணர்கிறேன்.
- அதனால் தான் சில கவிஞர்கள் எதிரிலிருக்கும் வாசகர்களிலிடம் பேசுவது போல் எழுதுகிறார்கள் போலும் என்று உணர்ந்தேன்.

**முடிவுரை:**

பேச்சுமொழியாயினும், எழுத்து மொழியாயினும், மொழி என்ற ஒன்று என்னுள் வந்தபின்தான். உலகம் எனது கவனிப்புதற்குரிய ஒன்றாக மாறியது எனது உலகத்தை இழையிழையாகப் பிரித்தும், வகுத்தும், தொகுத்தும் கொடுத்தது என்பதை உணர்ந்தேன்.

**(அல்லது)**

**தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர்:**

**முன்னுரை :**

ஆனந்தரங்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் பிரெஞ்சுக் கிழக்கிந்திய உரை பெயர்ப்பாளராகவும், துய்ப்பளே என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர். இவருடைய நாட்குறிப்புகள் இருபத்தைந்து ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவன. அக்காலத்தில் பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்றுக் கருவூலமாகவும் ஆவணமாகவும் இலக்கியமாகவும் நாகரிகப் புதையலாகவும் இவருடைய நாட்குறிப்புகள் திகழ்கின்றன.

**இந்தியாவின் பெப்பிசு:**

உலகநாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவார். ஆனந்தரங்கர் 06.09.1736 ஆம் ஆண்டு முதல் 11.01.1761 ஆண்டு வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும். இதனால் தான் இவர் "இந்தியாவின் பெப்பிசு" என்று அழைக்கப்படுகிறார். ஆனந்தரங்கர் நாட்குறிப்பு 12 தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளது. இது வெளிப்படுத்தும் விரிவான செய்திகளை வரலாற்றறிஞர் தம் குறிப்புரைகளின் துணையோடு கண்டறிய முடியும்.

**நாகரிகத்தின் முதிர்ச்சி:**

- ஆனந்தரங்கர், தம்முடைய நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, அந்த நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறித்துப் பதிவிட்டு செய்திகளை எழுதியிருக்கிறார். இஃது அன்றைய நாளிலேயே நாகரிகத்தின் முதிர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறது.

**அரசியல் வேறுபாடில்லாமல்:**

- தேவானம் பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ்பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள், தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட்கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகையிட்டது முதலிய செய்திகளையும் அரசியல் வேறுபாடில்லாமல் பதவிட்டிருக்கிறார் ஆனந்தரங்கர்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**சமுதாய செய்திகள் :**

புதுச்சேரி ஆளுநர் துய்மா, பட்டணத்துக்குள்ளேயும், உப்பங்கழியிலும், பட்டணத்து வீதிகளிலும் காலைக்கடன் கழிப்பவர்களிடம் ஆறுபணம் தண்டம் விதிக்கப்படும் என்று கட்டளையிட்டார். இதை மீறியவர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இரண்டு பணமும், சாவடிக்கு (வசூல் செய்யுமிடம்) நான்கு பணமும் கிடைக்கப்பெற்றது. இதைத் தம் நாட்குறிப்பில் பதவிட்டிருக்கிறார்.

**நீதியும் தண்டனையும்:**

பல்வேறு காரணங்களுக்காக மரண தண்டனை வழங்குதல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய தண்டனைகள் இவர் காலத்திய நீதிவழங்கும் முறைகளாகும். திருடி வரும் கும்பல் பிடிப்பட்டபோது, தலைமைத் திருடனைக் கடைத் தெருவில் தூக்கில் தொங்க விட்டனர். ஏனையவர்களுக்கு காதறுத்தல், ஐம்பது கசையடி தரப்பட்டது. ஆனந்தரங்கர் தமது நாட்குறிப்பில் தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக ஒவ்வொரு செய்தியையும் குறித்து வைத்துள்ளார்.

***ஆ) பின்வரும் துணைப்பாடல் பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.***

**43. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரியைப் பாதுகாப்பு:**

**யானை டாக்டர்**

1. யானை டாக்டர் என்ற குறும் புதினத்தை எழுதிய **ஜெயமோகன்** ஒரு இயற்கை ஆர்வலர்.
2. யானை டாக்டர் என்று அழைக்கப்பட்ட **டாக்டர் வி.கிருஷ்ணமூர்த்தி**, தமிழகத்தின் முக்கியமான காட்டியல் வல்லுநர்களில் ஒருவர்.
3. இவர் காட்டு விலங்குகளுக்கும், பழக்கப்படுத்தப்பட்ட மிருங்களுக்கும் **மருத்துவ உதவி** அளிப்பதைப் பணியாகக் கொண்டவர்.
4. இக்கதையில் **மனிதர்களால் யானைக்கு** ஏற்பட்ட **தீங்கினையும்** அதனால் யானைகள் படும் துயரையும் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஜெயமோகன்.
5. மனிதனின் கீழ்மைகள் நாள்தோறும் வளர்வதன் சாட்சியாக **யானைகளின் மரணங்கள்** நிகழ்கின்றன.
6. **சுற்றுப்பயணம்** என்ற பெயரில் காட்டுக்கு வரும் வசதியானவர்களும் படித்தவர்களும் குடித்துவிட்டு வெறியுடன் காட்டில் **மதுக்குப்பிகளை** வீசுவிடுகின்றனர்.
7. இக்குப்பிகள் வனவிலங்குகளுக்கு, குறிப்பான யானைகளுக்கு **ஆபத்தானவை** ஆகும்.
8. யானையின் காலில் ஏறிய குப்பிகள் பாகங்கள், நாளடைவில் அதன் **உயிரையே பறித்துவிடும்**.
9. காட்டில் உயிரினங்கள் வாழ **இயற்கையைப் பாதுகாக்க** வேண்டும்.
10. காடுகளும், மரங்களும், விலங்குகளுமே பூமியின் **இயற்கை வளம்**.
11. அவற்றைப் பாதுகாப்பது **மனிதன் உயிர்வாழ** பூமியைப் பாதுகாப்பதற்குச் சமம்.
12. இக்கதையின் மூலம் மனிதனின் தவறால் யானைகள் படும் துயர்களை அறிகிறேன்.

எனவே, காட்டிற்குள் செல்வதை மக்கள் தவிர்த்து **நெகிழி, மதுக்குப்பிகள்** போன்வற்றை பயன்படுத்தாமல் இயற்கை மற்றும் உயிரினப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

**(அல்லது)**

**சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகள்:**

**இசைஞானி இளையராஜா**

- **அன்னக்கிளி** படத்தில் முதன்முதலில் இசையமைப்பாளராக இளையராஜா அறிமுகம் ஆனார்.
- அவர் இசை அமைத்த பாடல்கள் பட்டித்தொட்டி எங்கும் **தென்றலாய் வீசியது**.
- **1970**களில் பிற மொழி சுமந்த பாடல்களை தவிர்த்து தமிழ் இசையை நோக்கி பிற மொழியினரை திரும்பி பார்க்க வைத்தது இளையராஜாவின் இன்னிசை தான்.
- ஆசியாவிலேயே **முதன்முதலில் சிம்பொனி** என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் இவரே.
- எப்படிப் பெயரிடுவேன்? என்னும் இசைத் தொகுப்பு, புல்லாங்குழல் இசைக்கலைஞர் **ஹரிபிரசாத் சௌராஸியாவுடன்** இணைந்து வெளியிட்ட **'காற்றைத் தவிர ஏதுமில்லை'** என்னும் இசைத்தொகுப்புகள் இசையுலகின் புதிய முயற்சியாக கொண்டாடப்பட்டது.
- மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை, உற்சாகம், வலி போன்ற மனித உணர்வுகளை தனது **"இந்திய 24 மணி நேரம்"** என்னும் ஆவணக்குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.
- மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடலுக்கு ஆரட்டோரியோ என்னும் வடிவில் இசை அமைத்துள்ளார். தமிழில் **'இராஜாவின் ரமணமாலை' 'இளையராஜாவின் கீதாஞ்சலி'** கன்னடத்தில் **'மூகாம்பிகை'** என்ற பக்தி இசைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.
- ஆதிசங்கரர் எழுதிய **மீனாட்சி ஸ்தோத்திரம்** என்ற பக்திப் பாடலுக்கு இசை அமைத்துள்ளார்.
- பஞ்சமுகி என்ற கர்நாடகச் **சங்கீத இராகம்** அவர் உருவாக்கியதாகும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**ஆஸ்கார் தமிழர் ஏ.ஆர்.ரஹ்மான்**

- ஏ.ஆர்.ரஹ்மான் **1992ஆம்** ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்தில் இசையமைப்பாளராகத் தனது திரையிசைப் பயணத்தைத் தொடங்கினார்.
- **முதல் படத்திலேயே** அவருக்கு சிறந்த இசை அமைப்பாளருக்கான தேசிய விருது கிடைத்தது.

**VIII. மனப்பாடப்பாடல்**

44. **அ) குறுந்தொகை:**

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரியது என்னும் ஆங்கணதவையே
\- வெள்ளி வீதியார்

**ஆ) விடற்கு என முடியும் குறள்:**

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com